1979 மார்ச் 5]

திரு. என். வரதராஜன்: சார், ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விளக்கம் இதிலே கேட்கக்கூடாது. அடுத்து விதி 41-ன் கீழ் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. தாமரைக்கனி.

(6) கவன ஈர்ப்பு.

திருவில்லிப்புத்தூர் விவசாயிகள் நிலைமை குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ''திருவில்லிப்புத்தூர் தொகுதியில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உள்ள நெல், தென்னை, கரும்பு, மிளகாய், வெங்காயம் ஆகிய பயிர்கள் நாசம் அடைந்துள்ளதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை அதிகாரிகள் உடனடியாக மதிப்பிட்டு அதற்குண்டான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். திருவில்லிப்புத்தூர் தாலுக்காவில் கீழ்க்கண்ட பரப்பளவில் பயிர்கள் சேதமடைந்தன.

வாழை—59·31 ஏக்கர்.

கரும்பு—6·00 ஏக்கர்.

வெற்றிலை—1·35 ஏக்கர்.

அரசு மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகளின் பயனாய் சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைக்காரர்களுக்கு வாழைக்கன்றுகளைப் புதுப்பிப்பதற்காக ரூ. 5,931-ம் (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 59·31 ஏக்கருக்கு) கரும்புக்கு ரூ. 50-ம் (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 50 சென்டுக்கு மட்டும்) வெற்றிலைக் கொடிக்காலுக்கு ரூ. 675-ம் (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 வீதம் 1·35 ஏக்கருக்கு) கொடுக்கப்பட்டுள்ளது. கரும்பு பயிரிடப்பட்ட 6 ஏக்கர்களில் $5\frac{1}{2}$ ஏக்கர் நிலங்கள் சிறு விவசாயிகளுடையதல்ல. எனவே, $5\frac{1}{2}$ ஏக்கர் நிலங்களில் ஏற்பட்ட சேதங்களுக்கு அரசு உதவி ஏதும் செய்யப்படவில்லை.

நெல்—386 ஏக்கர்.

மிளகாய்—103 ,,

வெங்காயம்—3 ஏக்கர்
வரகு—31 ,,
கேழ்வரகு—18 ,,
சோளம்—4 ,,

ஆகிய பயிர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டன.

மேலும் இராமநாதபுரம் மாவட்டம் முழுமைக்கும் நிவாரண நடவடிக்கையாக இதுவரை வாழைக்கு 37,556/-ரூபாயும், வெற்றிலைக் கொடிக்காலுக்கு 96,295/-ரூபாயும், கரும்புக்கு 6,597/-ரூபாயும் சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைக்காரர்களுக்கு மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. மற்றும் 450 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போதும் கூட அந்தப் பகுதியில் விவசாயம் செய்ய முடியாத நிலையில் நத்தப்பட்டி பகுதியில் 20-க்கு மேற்பட்ட டாங்குகள் உடைபட்டும் விவசாயக் கிணறுகள் ஏராளமாக மூடப்பட்டும், அதன் காரணமாக அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலையை உணர்ந்து நில வரியை ரத்து செய்தும், மின்சாரக் கட்டணத்தை ரத்து செய்தும், நீண்ட காலக் கடனை குறுகிய காலக்கடனாகத் தள்ளிவைத்தும், குறுகிய காலக்கடனைத் தள்ளுபடி செய்தும், உத்தரவிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு மானியங்கள், ஏற்கனவே சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கைகள் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, நான் பேசும்போது 26-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்று கூறினேன். அதை 1979ம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். அன்று நான் போகும்போது எல்லோரும் என்னை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதோடு நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் மேட்டூர் தண்ணீர்...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கரக்ஷன் கேட்டீர்கள், அது முடிந்துவிட்டது. மேலும் பேச வேண்டாம்; உட்காருங்கள். (குறுக்கீடு) திருத்தத்தைச் சொல்லிவிட்டீர்கள், போதும்.